ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

ECHOES
இந்தியா
செய்திமடல்

# மாஸ்டரின் செய்திகள்




## வட அமெரிக்க சுற்றுப்பயணம்

மதிப்பிற்குரிய கம்லேஷ் பாய், மே 26 மதியம், டென்மார்க்கிலிருந்து நியுயார்க்கின் JFK பன்னாட்டு விமான நிலையத்திற்கு வந்து சேர்ந்தார். ஒரு மாதத்திற்கு மேல் இருந்த இந்த வட அமெரிக்கப் பயணம், அப்பகுதியில் சகஜ மார்க்கத்தை ஒரு புதிய நிலைக்கு இட்டுச் சென்றது. மன்ரோ (நியு ஜெர்சி) , டொரொன்டோ (கனடா) டெட்ராயிட் (மிச்சிகன்) பீவெர்க்ரீக் ((டேய்டன்) ப்ரெமான்ட் ( கலிபோர்னியா), ஆஸ்டின் (டெக்சாஸ்), ஸ்பர்ஸ் ரிட்ரீட் ,மோலேனா ( ஜார்ஜியா), ரிச்மாண்ட் (வர்ஜினியா) ,மேலும் ஸ்டான் ஐலண்ட் (நியு யார்க்) போன்ற இடங்களில் உள்ள ஆசிரமங்கள், மையங்களை அவர் பார்வையிட்டார்.

இந்தப் பயணத்தின் போது கம்லேஷ் பாய் அப்யாசிகளைச் சந்தித்து, சத்சங்கங்கள், மற்றும் இதயம் நிறைந்திருத்தல் நிகழ்ச்சிகளை நடத்தி, புதிய யுக்தியான ’இதயம் நிறைந்திருத்தல்’ மற்றும் பிற ஆன்மீக விஷயங்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட சந்தேகங்களைத் தீர்த்தும் வைத்தார். தளர்வு நிலை நுட்பம் மற்றும் சகஜ மார்க்கத்தை உலகம் முழுவதும் கொண்டு செல்வது எப்படி என்பதை விவரித்து, இளைஞர்கள், பெரியவர்கள், குழந்தைகள், சிறுவர்கள், அனைவருடனும் தனது நேரத்தைச் செலவழித்தார். ஆன்மீகத்தைப் பற்றிய சில தீவிரமான சிந்தனைகள், சாதனாவின் முக்கியத்துவம் பற்றிய தனது கருத்துக்கள் ஆகியவற்றைப் பகிர்ந்து கொண்டார். அப்யாசிகள் அனைவரும் அவருடன் இருந்த ஒவ்வொரு கணமும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய ஒன்று என்பதை உணர்ந்தனர்.

இந்த பயணத்தருணத்தில் இருந்த முறை சாரா கலந்துரையாடல்களிலும், பேச்சுக்களிலும் இருந்து எடுக்கப்பட்ட சில கருத்துக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. பயணத்தின் முழு விவரங்களின் தொகுப்பு மிஷனின் இணைய தளத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

- கூருணர்வுத்திறன் வளர்ச்சிக்கான அடிப்படை விஷயமாகும். கூருணர்வுத்திறன் இல்லையென்றால் இலட்சியத்தை ஒருவரால் அடைய முடியாது என்று அவர் சொன்னார்.
- மக்களை நம்புவது என்பது விவேகமானது. அதனால் நம்பிக்கையை தவறாகப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். இருந்தாலும் காலப்போக்கில், நம்பிக்கை வைத்திருப்பவர்கள் நன்மை அடைவார்கள்.






- ஒரு அப்யாசி ஒளி உலகம் எங்கே இருக்கிறது என்று கேட்ட போது, கம்லேஷ் பாய் தன் இதயத்தைச் சுட்டிக் காண்பித்து, "அது இங்கே தான் இருக்கிறது, நம் இதயத்தில்" என்று பதில் அளித்தார். அது இங்கே இப்போது உள்ளது. ஒளி உலகத்தில் இப்போது நாம் இல்லையெனில், பின்னால், இந்த பௌதீக உடலை நீங்கிச் செல்லும்போது, ஒளி உலகத்தை அடையப்போவதில்லை.
- இதயம் நிறைந்திருத்தல் பற்றி விளக்கியபோது, அது ஒன்றும் புதியது அல்ல என்றார். ஒரு வேளை, கடவுளின் இதயம் நிறைந்திருத்தலே இந்த பிரபஞ்சத்தை உருவாக்கி இருக்கலாம். இதயம் நிறைந்திருத்தலும், சகஜ மார்க்கமும் ஒன்றேதான். அவை எளிமையையும், பரிசுத்தத்தையும் பற்றியது.
- மற்றவர்களிடம் மரியாதை கொண்டு, நாம் நம்முடைய வாழ்க்கையில், இதயம் நிறைந்திருத்தலைப் பயிற்சி செய்ய வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். எப்போதும் நாம் நம்முடைய தவறுகளைப் புறக்கணித்து விடுகிறோம். மற்றவர்களின் தவறுகளை மன்னிப்பதில்லை. இதயத்தைக் கவனித்து, முழுமையான தெளிவை உள்ளே கொண்டு, எதிர்மறையான தருணங்களில்கூட இதயம் சொல்வதை துணிவுடன் பின்பற்ற வேண்டும் என்றார்.
- அன்பு, அன்பர், அன்பிற்குரியவர் என்ற மூன்றும் ஐக்கியமாவதில் ஒரு அழகு உள்ளது. எனது அன்பிற்குரியவரிடம், என்னுடையது என்று எதுவும் இல்லாமல் நான் கரையும் வரையில் ஆன்மீகம் என்பது சாத்தியமில்லை. ஒன்றிணைதல் என்பது முடிவல்ல. அது, பரிசுத்தமான ஆன்மீக ஜீவிதத்தின் தொடக்கம்தான்.

## இந்திய சுற்றுப் பயணம்

### பெங்களூரு

கம்லேஷ் பாய் 26ம் தேதி ஞாயிறு மதியம், சென்னையிலிருந்து பெங்களூருவுக்கு புறப்பட்டார். மாலை 6:30 மணியளவில் ஒசூரை அடைந்து, சத்சங்கம் நடத்தினார். மாலையில் பெங்களூருவைச் சென்றடைந்தார். 27, 28 தேதிகளில் கமலேஷ் பாய் சிட்டிங்குகள் அளிப்பதிலும், வயது முதிர்ந்த அப்யாசிகள், குழந்தைகளைச் சந்திப்பதிலும், பிரெசப்டர்களைத் தயார்ப்படுத்துவதிலும் ஈடுபட்டிருந்தார். இதயம் நிறைந்திருத்தல் பற்றிய முறைசாராக் கலந்துரையாடல்கள் பல இருந்தன. 29 ம் தேதி, கம்லேஷ் பாய் காலையிலேயே தயாராகி, அப்யாசி குழுக்களைச் சந்தித்தார். காலை உணவின் போது, சகஜ மார்க்கம் ஒரு ஆன்மீக இயக்கமாகி, அதில் அனைவரும், ஒருவருக்கொருவர் ஒற்றுமையுடனும், விசுவாசத்துடனும் உற்சாகத்துடன் ஈடுபட வேண்டும் என்று கூறினார். காலை 7:30 மணியளவில் அவர் மண்டல ஆசிரமத்திற்கு புறப்பட்டார்.

மண்டல ஆசிரமத்தில் அப்யாசிகள் ஒன்றுகூடி அவருடைய வருகைக்காக அமைதியாகக் காத்திருந்தார்கள். காலை 9 மணியளவில் சத்சங்கம் நடத்தி, சிற்றுரை ஆற்றினார். மாஸ்டர்கள் பரிசாக அளிக்கும் உள் நிலையை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது பற்றிக் கூறினார்: "... மனிதர்களைப் பார்க்கும் போதும், அவர்களுக்கு சேவை செய்யும் போதும், அவர்கள் பேசுவதைக் கேட்கும் போதும், அது அவர்களுடைய இதயங்களைத் தொட்டு, கசியட்டும். அது மற்றவர்களைத் தொடட்டும்; மற்றவர்களின் இதயங்களைத் தொடட்டும். இதனால், நம்முள் சொட்டுச் சொட்டாக செலுத்தப்படும் எந்த நிலையும், இவ்வாறான ஆற்றல்மிக்க செயல்பாடுகளின் மூலம் வளர்ச்சியடைகிறது." மாலை 5 மணியளவில் சத்சங்கம் நடத்தி, மகோன்னதமான ஆன்மீக இயக்கத்தில் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அழைத்து உரையாற்றினார்.

### ஆந்திர பிரதேசச் சுற்றுப் பயணம்

ஜூலை 30 தேதி கமலேஷ் பாயின் ஆந்திரப் பிரதேச சுற்றுப்பயணம் தொடங்கியது. காலை 7.30 மணியளவில் அனந்தப்பூருக்கு புறப்பட்டார். அனந்தப்பூர் என்ற பெயரைச் சுட்டிக்காட்டி, "அனந்தத்தை நோக்கிய யாத்திரை துவங்கி விட்டது - *அனந்த் கி யாத்ரா"* என்று கூறினார். தமது உரைகளில், குருவினுடைய நினைவில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ளும் காலம் என்பதே குரு பூர்ணிமாவின் முக்கியத்துவம் என்று கோடிட்டுக் காட்டினார். இதயம் நிறைந்திருத்தல் என்பது சகஜ மார்க்கத்தை அணுகும் முறை, சகஜ மார்க்கம் என்பது நாம் பின்பற்றும் வழி, மற்றும் ஸ்ரீ ராம் சந்த்ர





ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா செய்திமடல்





மிஷன் என்பது ஒரு ஸ்தாபனம் என்றும் கூறினார். முதியோர்களிடம் அன்பு செலுத்தி, உதவி புரியவேண்டியதை வலியுறுத்திய அவர், இளைஞர்கள், முதியோர்களுடனிருந்து, அவர்களது அனுபவங்களிலிருந்து கற்க வேண்டும் என்றும், சகஜ மார்க்கம், அதன் சேவையின் காரணமாய் பெயர் பெறும் என்ற தமது விருப்பத்தையும் கூறி, அதை அனந்த சேவை எனக் குறிப்பிட்டார், ஜூலை 31 குரு பூர்ணிமாவன்று சத்சங்கத்திற்குப் பிறகு, ஆன்மீகப்பயணத்தைப் பற்றி உரையாற்றுகையில் அவர், 'பாரமில்லாமல் பயணம்' செய்வதன் அவசியத்தை வலியுறுத்தினார். ஐக்கிய நிலை அடைவதை எளிதுபடுத்தும் வகையில் நம்மை இன்னும் அதிகம் தியானம் செய்யுமாறு கேட்டுக்கொண்டார். நந்தியாலுக்குச் செல்லும் வழியில், அவர் தாடிபத்திரியிலுள்ள ஆசிரமத்திற்குச் சென்று அங்கே அப்பிராந்திய மொழியில், 'இதயம் நிறைந்திருத்தல்' நிகழ்ச்சியை நடத்திய பின்னர் சத்சங்கம் வழங்கினார். மாஸ்டர் நந்தியாலை மதியம் 2மணிக்கு சென்றடைந்தார். மதிய உணவு வேளை கழிந்து விட்ட போதிலும் மாஸ்டர் எல்லோரையும், அவர்கள் பசியும் களைப்பும் இல்லாமலிருந்தால் சத்சங்கத்தில் அமருமாறு கூறி, அது சிறிய சத்சங்கமாய் இருக்கும் என்று நகைச்சுவையாய் கூறினார். மதிய உணவின் போது ஒரு அப்யாசி மழை வருவதற்கு ஏதாவது செய்யுமாறு சகோ.கம்லேஷை வேண்டிக் கொண்டார். அதற்கு அவர், "நான் நமது மாஸ்டர்களிடம் அதற்காகப் பிரார்த்தனை செய்துள்ளேன்" என்று கூறினார். உள்ளூர் அப்யாசிகளுக்குப் பெரும்



வியப்பூட்டும் வகையில் மாலையில் கனத்த மழை பெய்தது. அவரது அடுத்த நிறுத்தமான நந்திகொட்கூர் ஆசிரமத்தில் மதியம் சத்சங்கம் நடத்திய பின் கர்நூலுக்குக் கிளம்பினார். காரில் பயணிக்கும் போது அவர், மதியம் நடத்தப்படும் சத்சங்கம் மிகவும் தீவிரமாகவும் ஆழமாகவும் இருக்கிறது என்ற கணிப்பைப் பகிர்ந்து கொண்டார். கர்னூலில் மாஸ்டர் சகஜ மார்க்க இயக்கம் மற்றும் முதியோர்களுக்கு அனந்த சேவை ஆகியவற்றைப் பற்றிப் பேசினார். கர்னூலில் சத்சங்கங்களைப் பரவலாக நிர்வகித்து, இன்னும் பல இடங்களில், அப்யாசிகள் நடக்கக்கூடிய தூரத்தில் நடத்தினால் மேலும் அதிகம் பேர் பங்கேற்கக்கூடும் என்று பரிந்துரைத்தார்.

ஆகஸ்ட் 2ம் தேதி சத்சங்கத்திற்குப் பிறகு ஆற்றிய உரையில், அடுத்தவர் மீது அக்கறை கொண்டு, வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் மற்றவர்களுக்கு உதவுமாறும் வேண்டுகோள் விடுத்தார். பிறர் துன்பத்தைக் கண்டு, நாம் பிரார்த்தனையாவது செய்ய வேண்டும் என்று கூறினார். அனைத்து சூழ்நிலைகளிலும் நாம் அடக்கம், எளிமை மற்றும் அன்பான இதயத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். அது தான் நம்மெல்லோரையும் ஒன்றாக முன்னுக்குக் கொண்டு செல்லும் என்றார்.

மாஸ்டர் காலை சுமார் 10 மணிக்கு யெம்மிகனூருக்குக் கிளம்பினார். யெம்மிகனூரில் மாலை 6மணி சத்சங்கத்திற்குப் பிறகு அவர் பேசுகையில் நாம் மேலிருந்து போதனைகளைப் பெற வேண்டி தியானம் செய்ய வேண்டும் என்றார். அங்கிருந்த ஒருவர், ஏன் நாம் மற்ற அமைப்புகளைப் போல சமூக சேவைகளில் ஈடுபடக்கூடாது என்று கேட்க அவர், "நான் ஒப்புக்கொள்கிறேன்.உங்களிடம் பணமும் நேரமும் இருந்தால் தயவு செய்து செய்யுங்கள்" என்று கூறினார்.

சகஜ மார்க்கம் மதத்திற்கு எதிர்ப்பாக உள்ளது என்ற தவறான அபிப்பிராயத்தைக் மக்கள் கொண்டுள்ளனர் என்று மாஸ்டர் கூறினார். உண்மையாகச் சொல்லப் போனால் சகஜ மார்க்கம் மதத்தின் சாரத்தை எடுத்துக் கொண்டுள்ளது. பிறகு அவர், "மதத்தின் சாரம் என்ன?" என்று வினவி அதற்கு பதிலாக - "முதலாவது: இறைவன் எல்லா இடத்திலும் இருக்கின்றார்; இரண்டாவது: அன்பே மதத்தின் அடிப்படையாகும். அதைத் தான் நாம் செய்து கொண்டிருக்கிறோம்" என்று கூறினார். உதாரணமாக அவர், பகவத் கீதையின் 12வது அத்தியாயத்தில் ஸ்ரீ கிருஷ்ணன், நாம் அனைத்துக் கடமைகளையும் தெய்வீக உணர்விலாழ்ந்தபடி செய்ய வேண்டும் என்று கூறியுள்ளதைக் குறிப்பிட்டார். அதுவே சகஜ மார்கத்தின் நிரந்தர ஸ்மரணையாகும். சுலோகங்களை மனனம் செய்வதை விட்டு, நாம் அதன் சாரத்தை நமது வாழ்க்கையில் பயன்படுத்துவதைக் குறிக்கோளாகக்





கொண்டுள்ளோம் என்று கூறினார்.

மாஸ்டர் ஆகஸ்ட் 2 ம் தேதி கர்னூல் ஆசிரமத்தில் சத்சங்கம் நடத்தினார். திருவள்ளூரில் நடைபெற்ற விழா உண்மையில் நமக்கு அளிக்கப்பட்ட ஆசீர்வாதம். ஆனால் துரதிருஷ்டவசமாக வானிலை ஒத்துழைக்கவில்லை என்றார். இருப்பினும் நமக்கு சாதகமாக இல்லாத சூழ்நிலைகளில் தான் நம்முடைய உண்மையான குணம் வெளிப்படுகிறது. அன்றைய இரவில் முதியவர் ஒருவர் கூடாரத்தில் தான் இருந்த ஈரம் இல்லாத இடத்தினை ஒரு தாயும் குழந்தையும் தூங்குவதற்காக அளித்ததை உதாரணமாகக் கூறினார். நம்மைப்பற்றி எண்ணுவதற்கு முன் பிறரைப் பற்றி எண்ணுவதுதான் சேவை என்றார்.

ஆகஸ்ட் 3 ம் தேதி கம்லேஷ் பாய் எம்மிங்கனூரில் இருந்து 30 கி.மீ தொலைவில் உள்ள அடோனி என்ற சிறிய மையத்திற்குச் சென்றார். காலை 6.30 மணிக்கு சத்சங்கம் நடத்தினார். அங்குள்ள அப்யாசிகள் அனைவரும், உள்ளார்ந்த நிலையில் தங்களைத் தயார்படுத்திக்கொள்ளாமல் இருப்பதை உணர்ந்தார். அவர் அளிக்க நினைத்ததை அவர்களால் ஏற்றுக்கொள்ள இயலாமல் இருப்பதை அவர்களது நிலை பிரதிபலித்தது. காலை உணவுக்குப்பின் மாஸ்டர் எம்மிங்கனூர் திரும்பினார். மாலை 4 மணிக்கு வட கர்நாடகாவுக்குப் புறப்பட்டார்.

**வட கர்நாடகா**

ரெய்ச்சூரை அடைந்தவுடன் கம்லேஷ் பாய் ஒரு குறுகிய தியானம் அளித்தார். இங்கே சகஜ மார்க்கத்தில் என்ன செய்து கொண்டு இருக்கிறோம் என்பதை வெளிப்படையாகப் பேசவேண்டியதன் தேவை நமக்கு உள்ளது. நாம் பேசுவதற்கு, குறிப்பாக மாணவர்கள், இளைஞர்களிடம் பேசுவதற்கு கூச்சப்படக்கூடாது. அவர்களின் சக்தியினை முறைப்படுத்த பல்வேறு பயிற்சி முறைகள் அவர்களுக்குத் தேவை என்றார். மேலும் அவர், பயிற்சிக்கு குறுக்கு வழி ஏதும் இல்லை என்று கூறினார். சில அப்யாசிகள் நினைப்பது போன்று முன்னேற்றம் என்பது பிரிபெக்ட், அதன் பின் பொறுப்பாளர்கள் ஆவது போன்ற வழி முறை எதிலும் இல்லை. உண்மையிலேயே நமது மார்க்கத்தில் சில அப்யாசிகள் பல பிரிபெக்ட்களை விட உயர்ந்த நிலையில் உள்ளனர். பாபுஜி ஒரு பிரெசெப்டர் அல்ல. ஆனால் ஆன்மீகத்தில் ஒருவர் அடைக்கூடிய மிக உயர்ந்த நிலையினை அவர் அடைந்திருந்தார்.

’அனைத்து அப்யாசிகளும் அனைவரின் நன்மைக்காகவும் பணியாற்ற வேண்டும் என நான் விரும்புகிறேன். உங்களிடம் வருபவர்களுக்கு தளர்வு நிலைநுட்பப் பயிற்சியினை அளித்து, அவர்கள் சகஜ மார்க்கத்தில் சேர விரும்பினால் உள்ளூர் பிரிபெக்ட்டுடன் தொடர்பு கொள்ளச் செய்யுங்கள். புதிதாக வருபவர்கள் தேவையான அமர்வுகளை எடுத்துக்கொண்டார்களா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். பாபூஜி மகராஜ் காலம் மிகவும் குறைவாக உள்ளது என்ற செய்தியினைத் தொடர்ந்து அனுப்பி வருகிறார். என்னைப் பொறுத்தவரை இதன் பொருள், அலைகள் ஓய்வதற்கு முன்பாக, இந்த மார்க்கத்தினை பரப்புவதற்குரிய காலம் மிகவும் குறைவாக உள்ளது என்பதுதான். அப்யாசிகள் இந்த மார்க்கத்தினைப் பரப்பாவிடில் மண்டல பொறுப்பாளர் அல்லது பிரிபெக்ட்களால் எதுவும் செய்ய இயலாது. இந்த மார்க்கத்தினை பரப்புவதன் மூலம் மாஸ்டரின் பணியினைச் செய்வதுதான் நம்முடைய குருதட்சிணையாக இருக்கவேண்டும்.’ இரவு உணவுக்கு முன்னர், இதயம்









நிறைந்திருத்தலில் வெளியிடப்பட வேண்டிய சில புதிய வீடியோக்களை ஆய்வு செய்தார். ஆகஸ்ட் 4 அன்று காலை 8:15 மணிக்கு, கம்லேஷ் அவர்கள் ரெய்ச்சூரிலிருந்து குல்பர்காவிற்குச் செல்லும் வழியில், ஷோராபூரில் நிறுத்தி சத்சங்கம் நடத்தினார். குல்பர்காவில், குழந்தைகளையும், அப்யாசிகளையும் சந்தித்ததில் மகிழ்ச்சியுற்றார். சத்சங்கத்திற்கு பின், சகஜ மார்க்கத்திற்கான நம் அணுகுமுறையைக் குறித்து சிந்திக்க வேண்டியதன் அவசியத்தை முக்கியப்படுத்தி ஒரு சிற்றுரை ஆற்றினார். நமது கூருணர்வுத் திறன் மேம்படும் வண்ணம் நாம் பயிற்சியை தவறாது செய்ய வேண்டும். தியானமும் சுத்திகரிப்பும் தேவைப்படாத நிலைக்கு நாம் முன்னேற்றம் அடைய வேண்டும். "தினமும் நான் சூட்சும வடிவில் உங்களிடம் வருகிறேன்" என்று மாஸ்டர் கூறுவதாக, அவர் கூறினார். ஆனால் இதை நாம் உணர்வதில்லை.

ஆகஸ்ட் 5-ம் தேதி, கம்லேஷ் அவர்கள் செடாமிற்குச் சென்றார். அங்கு அவர், மண்டலப் பொறுப்பாளர் கன்னடத்தில் அளித்த 15 நிமிட தளர்வடைதல் நிகழ்ச்சிக்குப் பிறகு, தியான மண்டபத்தைத் திறந்து வைத்தார். காலை 9 மணிக்கு சத்சங்கம் நடத்தியபின், சில வரைபடங்களை மறுபார்வையிட்டு, மேம்பாட்டிற்கான ஆலோசனைகள் வழங்கினார். பின் சாலை மார்க்கமாக ஹைதராபாத்திற்குச் சென்றார்.

## ஹைதராபாத்

அவர் கன்ஹா ஆசிரமத்தை நண்பகலில் சென்றடைந்தபோது, மழை அவரை வரவேற்றது. சத்சங்கத்திற்குப் பின், அவர் ஆசிரமத்தை ஆய்வு செய்தார். ஆகஸ்ட் 6-ம் தேதி காலை 6 மணிக்கு, மாஸ்டர் ஹைதராபாத்திலுள்ள தும்குன்டா ஆசிரமத்திற்குச் சென்றார். அங்கே அவர், ஒரு பிரிசெப்டர் பயிற்சி நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார். அவர் 7ம் தேதி அன்று 200 அப்யாசிகளைக் கொண்ட ஒரு சிறிய ஒளி மையமான போங்கிர் சென்று, அங்கு சத்சங்கம் நடத்தினார். அவரை பேச அழைத்த போது, பேச வேண்டுமென்றிருந்த ஒரு சகோதரியை சுட்டிக் காட்டினார். அவரைத் தொடர்ந்து, மேலும் பல அப்யாசிகள் தமது நெஞ்சார்ந்த நன்றியை அவருக்கு தெரியப்படுத்தினர். அனைவரும் ஆனந்தத்தில் மூழ்கியிருந்தனர்.

இறுதியில் கம்லேஷ் அவர்களை பேசுமாறு மீண்டும் வலியுறுத்திய பிறகு அவர், அம்மையம் ஒரு பிரிசெப்டர் கூட இல்லாமல் வளர்ந்திருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைவதாகக் கூறினார். ஒரு சோதனை அடிப்படையில், அம்மையத்தில் பிரிசெப்டர்களே இல்லாமல், அப்யாசிகள் புதியவர்களை அறிமுகப்படுத்தக்கூடிய ஒரு முறை இருக்கவும் விருப்பப்படுவதாகக் கூறினார். அப்யாசிகள், ஆர்வலர்களின் அருகே அமர்ந்து, 'ப்ளீஸ் ஸ்டார்ட்' என்று கூறிவிட்டு, 30-40 நிமிடங்களுக்கு பிறகு 'தட்ஸ் ஆல்' என்று கூற வேண்டும். மாஸ்டரிடம் மட்டும் சற்று முன்னரே தெரிவித்துவிட வேண்டும். ஆச்சரியப்படுத்தும் விதமாக, கம்லேஷ் பாய் தன்னுடைய கைபேசி எண்ணை அனைவருக்கும் கொடுத்து, தன்னை அழைத்து அல்லது குறுந்தகவல் அனுப்பி, பயிற்சியைத் துவக்க விழைபவர்கள் ஒருவரோ அல்லது 200 பேரோ, அதைத் தெரிவிக்குமாறும், அவர்களுக்கு தாம் தொலைநிலை சிட்டிங்குகள் கொடுப்பதாகவும் கூறினார். ஒரு நாளுக்கு குறைந்தது 15 குறுந்தகவல்களை தாம் எதிர்பார்ப்பதாகவும் கூறினார். இது, தெலங்கானாவிலுள்ள போங்கிர் மையத்திற்கு மட்டுமானது என்று தெளிவுபடுத்தினார்.

மாஸ்டர், நண்பகலில் தும்குன்டா ஆசிரமத்திற்கு திரும்பினார். கருத்தரங்கிற்கு வந்திருந்த பிரிசெப்டர்களுக்கு உரையாற்றியபோது, மாஸ்டரின் பணிக்கு நமது அர்ப்பணிப்பு இல்லையெனில், ஓர் ஆன்மீக இயக்கம் உருவாக முடியாது என்று கூறினார். இணைப்பு இல்லையெனில், மாஸ்டர்கள் விரும்பும் விதத்தில் நிகழ்வுகள் நடைபெறாது என்பதனால் மாஸ்டரின் பிரசன்னத்தை வேண்டுவது அவசியமாகும் என்றார்.

ஆகஸ்ட் 8-ம் தேதி கம்லேஷ் அவர்கள், பிரிசெப்டர்கள் கால்வாய்களாக இருந்து, மாஸ்டரின் பணிக்கு எதிர்ப்பின்றி இருக்க வேண்டுமென்று வலியுறுத்தினார். பிரிசெப்டர்கள் சிட்டிங் கொடுக்கும்போது மட்டுமின்றி, எப்போதும் பணியாற்றிக் கொண்டிருக்க வேண்டுமென்று குறிப்பிட்டார். மாலை நேரங்களில் அப்யாசிகள் குடும்பத்தினருடன் நேரம் செலவழித்து, அக்கம் பக்கத்திலுள்ள பெரியோர்களிடம் உரையாடி, அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் ஆலோசனை அளித்தார்.





இரவு உணவிற்குப் பின், 9:30 மணி அளவில் அவர் குழந்தைகளுடன் நீண்டதூரம் நடந்து சென்றபோது, வேத கணித முறை மூலம், சிக்கலான எண்களைக் கொண்ட கணக்குகளுக்கு, எளிதாக விடை பெற, சில சுலபமான கருத்துக்களை அவர்களுக்கு கற்பித்தார்.

ஆகஸ்ட் 9 ம் தேதி ஞாயிறு சத்சங்கத்திற்கு பின் பேசிய அவர், அபுதியத் - 'முக்கியத்துவம் உணரா நிலை' என்ற ஆன்மீக நிலை பற்றிக் கூறினார். பிறகு அவர் தும்குன்டா ஆசிரமத்திலிருந்து புறப்பட்டு, காலை 11 மணிக்கு கன்ஹா ஆசிரமத்தை அடைந்தார். பாபூஜி நினைவு மண்டபத்தில் அவர் 12-12:45 வரை சிட்டிங் கொடுத்தார். அவர், மதிய வேளையில் அளிக்கும் சிட்டிங் வேகத்தைத் துரிதப்படுத்துகிறது என்றும், அந்த வேளையில் கொடுப்பவர் கொடுப்பதை, மிகவும் எளிதாக உள் வாங்கிக்கொள்ள முடிகிறது என்றும், 'இதயம் நிறைந்திருத்தல்' கூட்டங்களும் இவ்வேளைகளில் நடத்தப்பெற்றால் அவை மிகவும் பயனளிக்கும் எனவும் குறிப்பிட்டார். குழந்தைகளுக்கு 'தளர்வு நிலை' நுட்பம் பற்றி கற்பித்து, பின் நண்பர்கள், உறவினர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு குழந்தைகள் கற்றுத் தரவேண்டும் என வலியுறுத்தினார்.

ஆகஸ்ட் 12ம் தேதி காலை 4 மணி அளவில் ஹைதராபாத்தை விட்டு, அடுத்த கட்ட பயணத்தை மேற்கொண்டார்.

**பிரசெப்டர்களின் கருத்தரங்கு, ஹைதராபாத்**

தும்குன்டா ஆசிரமத்தில் ஆகஸ்ட் 4- 8 ம் தேதி வரை பிரசெப்டர்களுக்கான ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. இதில் மகாராஷ்ட்ரா, கேரளா, தமிழ்நாடு மற்றும் ஹைதராபாத்தை சேர்ந்த சுமார் 350 பிரசெப்டர்களும், இந்தியாவின் பல பகுதிகள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து பயிற்சியாளர்களும், புதிதாக பணி மேற்கொள்ளவிருக்கும் 102 பிரசெப்டர்களும் பங்கேற்றனர். இக்கருத்தரங்கு தினமும் காலை 9:00 மணி முதல் மாலை 5:30 மணி வரை நடைபெற்றது. சகோதரி எலிசபெத் டென்லெய் தன் குழுவினருடன் 'இதயம்நிறைந்திருத்தல்' பற்றி தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சியின் துவக்கத்தில் இருந்த, பூஜ்ய சாரிஜியின் 'பணிவு' பற்றிய உரை, புதிய இதயம் நிறைந்திருத்தல் நிகழ்வின் அணுகு முறைக்கு, பணிவு மிக முக்கியமானது என்பதை வலியுறுத்தியது. வழி காட்டுதலுடன் கூடிய தளர்வு நிலைப் பயிற்சி, குழுவில் கொடுக்கப்படும் தனி சிட்டிங்குகள், வழிகாட்டுதலுடன் கூடிய சுத்தகரிப்பு, மற்றும் இதயம் நிறைந்திருத்தல் பற்றிய ஒத்திகை பணிமனை முதலியன இடம் பெற்றன.

ஆகஸ்ட் 6 ம் தேதி காலை கம்லேஷ் பாய் தும்குன்டா ஆசிரமத்திற்கு வருகை புரிந்தார். காலையிலும் மாலையிலும், பிரசெப்டர்களுக்காக சத்சங்கம் நடத்தி உரையாற்றினார். 7 ம் தேதி காலையிலும் சத்சங்கத்திற்குப்பின் சிறிய உரையாற்றினார். அதைத் தொடர்ந்து ஒரு வினா-விடை நிகழ்ச்சி இருந்தது. பிரசெப்டர்களுடனான அவரது உரையாடல்களிலிருந்து சில கருத்துக்கள்:

- ஆன்மீக ஆர்வலர்களான நாம் மற்றவர்களின் மத பழக்க வழக்கங்களை எள்ளி நகையாடக்கூடாது. நம்மைவிட ஆன்மீகத்தில் முன்னேறி, உண்மை நிலையைக் கடந்துவிட்ட ஆன்மீக சாதனையாளர்கள், நம்மை ஒருபோதும் இகழ்ச்சியாக கருதுவதில்லை.
- ஆன்மீகம் என்பது மதங்களின் சாராம்சமேயாகும்.
- குற்ற உணர்வு கொண்ட இதயம் ஒரு போதும் அருளை ஈர்ப்பதில்லை. ஒரு பிரசெப்டராக முதலில் நாம் இதைப் பயிற்சி செய்ய வேண்டும். அப்பொழுது தான் அப்யாசிகளுக்கு இதிலிருந்து வெளியேற உதவ முடியும்
- மூலத்திலிருந்து வெளிப்படும் அருள் திரும்பிப்போவதில்லை. அருளை ஏற்க நீங்கள் தயாராகும் வரை அது காத்திருக்கிறது.
- நாம் சுத்தகரிப்பு செய்யும் பொழுது, எல்லாபதிவுகளும் வெளியேறி, அவ்விடத்தில் புனிதத்தன்மை உட்புகுகிறது என்று நினைக்கும்போது, அப்புனிதத்தன்மையை நம் இதயத்தில் உணரவும் வேண்டும்.
- சுத்தகரிப்பு என்பது மீட்டு அமைப்பதைப் போலாகும். மூலத்தைப் போல் நாம் ஆக, அது உதவுகிறது. பிரார்த்தனை நுட்பமாக சரிப்படுத்தும் ஒன்றாகும்.

ஆகஸ்ட் 8 ம் தேதி காலை 6.30 மணிக்கு, புதிதாக பணி மேற்கொள்ளவிருக்கும் 102 பிரசெப்டர்களுக்கு தன் குடிலில் கடைசி தயாரித்தல் சிட்டிங் கொடுத்த பின், அவர்களுக்கு சான்றிதழ் வழங்கி, தைரியமாகவும், தளரா நம்பிக்கையுடனும் பணியாற்றுமாறு கூறினார். காலை 9 மணிக்கு தியானக்கூடத்தில் மறுபடியும் அவர் நடத்திய ஒரு சத்சங்கத்துடன் இக்கருத்தரங்கு நிறைவுற்றது.







## இதயம் நிறைந்திருத்தல் நிகழ்ச்சிகள்

### ராஜஸ்தான்

ஜூலை 12 ஞாயிறன்று, **அஜ்மீரி**ல், ரயில்வே அதிகாரிகள் சங்கத்தில், தியானப் பயிற்சி முகாம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வட மேற்கு ரயில்வேயில் இருந்து சுமார் 250 அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் கலந்துகொண்டனர். **அல்வார்** மையத்தில் ஜூன் 21 அன்று நடத்தப்பட்ட நிகழ்ச்சியில், 18 ஆர்வலர்கள் மிஷனில் சேர்ந்தனர்.

### ஹரியானா

ஐக்கிய நாடுகளின் சர்வதேச யோகா தினத்தன்று, (ஜூன் 21) அக்ரோஹாவிலுள்ள (ஹிஸார்) மகாராஜா அக்ராசென் மருத்துவ கல்லூரியில், 'தியானம் செய்ய கற்றுக்கொள்ளுங்கள்' நிகழ்ச்சியானது நடத்தப்பட்டது. கல்லூரி நிர்வாகத்தினர், மூத்த ஆசிரியர்கள், மருத்துவர்கள், செவிலிப்பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் உட்பட சுமார் 140 பேர் கூட்டத்தில் கலந்துகொண்டனர். அதே நாளில், கல்லூரித் தலைவர்((Dean) உட்பட, 25 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு, அறிமுக தியானம் ஆரம்பிக்கப்பட்டது.

### குல்பர்கா, கர்நாடகா

ஜூலை 13 மற்றும் 14 அன்று, வழிகாட்டுதலுடன் கூடிய தளர்வு நிலைப் பயிற்சி மற்றும் தியான நிகழ்ச்சியானது, குல்பர்காவிலுள்ள காவலர் பயிற்சி கல்லூரியில் 157 பயிற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டது. உள்ளூர் பிரசெப்டர்கள், அடுத்த எட்டு நாட்களுக்கு நிகழ்ச்சிகளை நடத்தினர். 13 ம் தேதியன்று மதியம், குருகுல் கல்லூரியின் 150 பட்டதாரி மாணவர்களுக்கு ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. 14-ம் தேதியன்று மதியம், PDA பொறியியல் கல்லூரியின் விரிவுரையாளர்களுக்கு, மற்றும் ஒரு நிகழ்ச்சி வழங்கப்பட்டது.

### மத்திய பிரதேசம்

ஜூலை 11 மற்றும் 12 அன்று ஷெளபூர், ரனோட் மற்றும் சிவ்பூரி பகுதியில், 190 ஆன்மிக ஆர்வலர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

### திண்டுக்கல், தமிழ்நாடு

ஜூன் 26 அன்று, திண்டுக்கல் அருகிலுள்ள நிலக்கோட்டை அரசினர் பெண்கள் கல்லூரியில் ஒரு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அன்று அதில் 1500 மாணவிகள் கலந்துகொண்டனர். மூன்று குழுக்களாக பிரிக்கப்பட்டு, அவர்களுக்கு தியானம் அறிமுகம் செய்யப்பட்டது. அந்த கல்லூரியில் தொடர்ந்து சதசங்கம் நடத்த இடமளிப்பதாக, அக்கல்லூரியின் முதல்வர் தன்னுடைய விருப்பத்தினை வெளிப்படுத்தினார்.

### மத்திய மகாராஷ்டிரா

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, மத்திய மகாராஷ்டிராவின் பல்வேறு இடங்களில் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. **அவுரங்காபாத்** அரசு பொறியியல் கல்லூரியில் 100 பேர் கலந்து கொண்ட ஒரு நிகழ்ச்சியில், ஆசிரியர்கள், அவர்களது மனைவியர் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர். **புல்தானா**வில் பங்கஜ் லஹாத் பொறியியல் கல்லூரியில் 70 பேர் கலந்து கொண்ட ஒரு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. **சிஹாலி** ஆசிரமத்தில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில், 22 பேர் கலந்து கொண்டனர். **பைதானி**ல், பிரதிஸ்தான் கல்லூரியில் நடந்த நிகழ்ச்சியில், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் உதவிப் பணியாளர்கள் உட்பட 100 ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். **நாசிக்** மையத்தில், பள்ளிகள், கல்லூரிகள், நீதிமன்றத்தின் பார் கவுன்சில், மருத்துவமனைகள், ரயில்வே பணிமையங்கள் மற்றும் காவல் நிலையங்கள் என வெவ்வேறு இடங்களில் நடத்தப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் அனைத்தும், வியக்கத்தக்க வகையில் நல்ல வரவேற்பைப் பெற்றன. அந்நிகழ்ச்சிகளில் 1100 க்கும் மேற்பட்ட ஆர்வலர்கள் பங்கேற்றனர்.

### மும்பை

ஜூன் 20, 21 தேதிகளில், உலக யோகா தினத்தை முன்னிட்டு மும்பையில் ஆங்காங்கே தொடர்ச்சியான நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஐந்து நிகழ்ச்சிகள் நடைபெற்றதில், 1450 நபர்களுக்கு மேலாகப் பயனடைந்தனர். பன்வேல் ஆசிரமம், வஷியில் உள்ள சிட்கோ கண்காட்சி அரங்கம், பயனீர் மேனிலைப் பள்ளி, கண்டிவிலி, வஷியில் உள்ள கர்ம்வீர் பௌரவ் பாட்டில் கல்லூரி ஆசிரியர் குழுவினர் மற்றும் நவி மும்பையில் உள்ள ரிலையன்ஸ் குழுமங்களின் கார்ப்பரேட் அலுவலகம் முதலிய இடங்களில் பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கும் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

### உத்திரப்பிரதேசம்

**காஜியாபாத்** இளைஞர்கள் இணைந்து, அர்ப்பணிப்புமிக்க தன்னார்வலர் குழு ஒன்றை உருவாக்கியுள்ளனர். இக்குழுவினர், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் ஏற்பாடு செய்திருந்த ஏழு நிகழ்ச்சிகளில், 120 க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். உலக யோகா தினத்தன்று **அலகாபாத்** ப்ரிதம் நகரில் வசிப்பவர்களுக்கு ஒரு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. சுமார் 150 ஆர்வலர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். கிராம இணைப்பு நிகழ்ச்சியின் (வி-கனெக்ட்) ஒரு பகுதியாக, ஆகஸ்ட் 15 அன்று உத்திரப்பிரதேசம் கௌசாம்பி மாவட்டத்தில் **தாட்டா** மற்றும் **உதின்பஜர்க்** கிராமங்களில், ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உள்ளூர் பள்ளிகளில் அன்று சுதந்திர தின விழாவில் கலந்து கொண்டிருந்த மாணவ,

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

எக்கோஸ் இந்தியா செய்திமடல்



மாணவிகளும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். சுமார் 20 கிராமவாசிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். ஜூலை 31 அன்று **ஆக்ரா**, சூர்யா நகரில் ஒரு அப்யாசியின் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அப்யாசிகள் மற்றும் ஆன்மிக ஆர்வலர்கள் என 47 பேர் கலந்து கொண்டனர்.

**தெலுங்கானா**

ஆகஸ்ட் 1, 2 ஆம் தேதிகளில், கோதாகுடேம் மையத்தைச் சுற்றியுள்ள பல்வேறு கல்லூரிகளில் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. சுமார் 440 பங்கேற்பாளர்கள் தியானம் துவங்குவதற்கான தங்களது விருப்பத்தினைத் தெரிவித்தனர். இதில் 269 பேர் தங்களது அறிமுக தியானத்தை எடுத்துக் கொண்டுள்ளனர். சாதுப்பள்ளி மையத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில், கல்வி நிறுவனங்களின் 60 தலைவர்கள் கலந்து கொண்டனர். அஸ்வபுரம் ஆசிரமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மனுகுரு, ஹெவி வாட்டர் பிளான்ட்டில் பணிபுரியும் பாதுகாப்பு படையினர் 60 பேர் கலந்து கொண்டனர்.

**பஞ்சாப்**

ஜூலை 7 அன்று, FCI பாட்டியாலாவின் 50 பணியாளர்களுக்கு நடத்தப்பட்ட நிகழ்ச்சியில், தியானத்தைப் பற்றிய ஒரு சுருக்கமான அறிமுகத்தைத் தொடர்ந்து சத்சங்கம் நடத்தப்பட்டது. தியானத்தைப் பற்றி மேலும் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற தங்களது விருப்பத்தினை பங்கேற்பாளர்கள் வெளிப்படுத்தினர்.



**பெங்களூர்**

பெங்களூரில், ஜூலை மாதம் முதல், 23 க்கும் மேற்பட்ட வரவேற்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இதில் 150 பங்கேற்பாளர்கள் பயனடைந்துள்ளனர். பல்வேறு கல்வி நிறுவனங்கள் மற்றும் DRDO, HMT, Samsung உள்பட ஐந்து கார்ப்பரேட் அலுவலகங்களில் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. பாராசூட் ரெஜிமென்ட் பயிற்சி மையத்தில் பணிபுரியும் 350 இராணுவப் பணியாளர்களுக்கு ஒரு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரும் தியானம் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற தங்களது ஆர்வத்தினை வெளிப்படுத்தினர். பல்வேறு உப மையங்களில், ஆகஸ்ட் 15 அன்று, நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்றைய தினத்தன்று ஏறத்தாழ 100 ஆர்வலர்கள் தியானத்திற்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

**" 36 புதிய ஆர்வலர்களை மிஷனுக்கு அறிமுகப்படுத்தி, ஒரு கல்லூரியில் புதிய மையத்தைத் துவக்கிய ஒரு அப்யாசி. நம் எல்லோராலும் அவ்வாறு செய்ய முடியும்."**

சமீபத்தில், கம்லேஷ் பாய் பெங்களூருக்கு வருகை புரிந்த போது, மண்டல ஆசிரமத்தில் ஆற்றிய உரையில், ஒவ்வொரு அப்யாசியும் சகஜ மார்க்க இயக்கத்தில் பங்கேற்கவும், நம் மாஸ்டர்களின் செய்தி, இதயம் நிறைந்திருத்தல் அணுகு முறை மூலமாகப் பொதுமக்களைச் சென்றடையச் செய்யவும் ஊக்கப்படுத்தினார். அதனால் உற்சாகம் பெற்ற, கட்டுரை நிகழ்வின் சுயசேவகரும், கால்நடை மருத்துவருமான ஒரு அப்யாசி சகோதரர், பெங்களூரின் நகர்ப்புற எல்லையில் இருக்கும் ஒருபட்டப்படிப்பு கல்லூரியை அணுகினார். அவர், கட்டுரை நிகழ்வில் அக்கல்லூரியைப் பங்கேற்கச் செய்ய முயன்று கொண்டிருந்த போது, சில மாணவர்களிடம் தளர்வு நிலை நுட்பத்தைப் பற்றிப் பேசினார்.சுமார் 20 பேர் ஆர்வம் கொண்டதால், அவர்களுக்கு அங்கேயே மிகுந்த நம்பிக்கையுடன் அதைச் செய்தார். அதனால் ஏற்பட்ட பயனைக் கண்டு அவர்கள் வியப்படைந்தனர். தியானம் மூலம் அந்த அனுபவத்தை மேலும் தீவிரமாக்க அவர்களின் விருப்பத்தைக் கேட்டபோது, அநேகம் பேர் உடனேயே சம்மதித்தனர். தனது பிரெசப்டரை அழைத்து, ஒரு தொலைதூர சிட்டிங் கொடுக்குமாறு கேட்டு, மாணவர்களுடன் அவரும் அமர்ந்து கொண்டார்.அடுத்த நாள் கல்லூரிக்குச் சென்று, இரண்டாவது தொலைதூர சிட்டிங்கிற்கு ஏற்பாடு செய்தார். மூன்றாவது சிட்டிங் கொடுக்க பிரெசெப்டர் அக்கல்லூரிக்குச் சென்று மாணவர்களைச் சந்தித்தார். அவர் வியக்கும்படியாக, முதல்வர் உட்பட 11 ஆசிரியர்களும் தியானம் தொடங்க ஆவலுடன் இருந்தனர்.

இந்த ஒரு அப்யாசியால், 36 அப்யாசிகள் ஒவ்வொரு சனியன்றும் மதியம் 1- 2 தியானம் செய்யும் ஒரு புதிய மையம் அக்கல்லூரியில் உருவாகியுள்ளது. சகஜ மார்க்க இயக்கத்தில், மிகச் சிறிய அளவில் தன்னால் பங்கேற்க முடிந்ததைக் குறித்து, அந்த அப்யாசி மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளார்.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## பூஜ்ய சாரிஜி மகராஜின் 88 வது பிறந்த நாள் விழா கொண்டாட்டம்

நமது அன்புக்குரிய சாரிஜி மகராஜின் 88 வது பிறந்த நாள், மூன்று நாள் விழாவாக தமிழ்நாட்டின் திருவள்ளூர் மாவட்டத்தில் கொண்டாடப்பட்டது. விழாவில் கலந்து கொள்ள இயலாத அப்யாசிகள் அவர்களது மையங்களிலேயே கொண்டாடினர். இந்தியாவில் விழாவை கொண்டாடிய சில மையங்களின் புகைப்படங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.


















### புதிய நியமனங்கள்

**ஆசிரம மேலாளர், அலகாபாத் மையம்**
கர்னல்S.K.சர்மா

**மையப் பொறுப்பாளர், அலகாபாத் மையம்**
பிரத்திமா ஸ்ரீவஸ்தவா

**மையப் பொறுப்பாளர், லக்னோ மையம்**
P.K. மிஸ்ரா

**மையப் பொறுப்பாளர், நல்கொண்டா மையம்**
T.பிக்ஷம்

### புதிய அப்யாசிகளுக்கான பயிற்சி நிகழ்வு, உதய்பூர்

ஜூலை 5 ம் தேதி, உதய்பூர் மையத்தில், 25 புதிய அப்யாசிகளுக்காக, ஒரு நாள் பயிற்சி நிகழ்வானது ஏற்பாடு செய்யப்பட்டது. அப்யாசிகள் பிரார்த்தனை, தியானம், சுத்திகரிப்பு, மாஸ்டர் மற்றும் மிஷன் ஆகிய தலைப்புகளில் கலந்துரையாட சிறு குழுக்களாக பிரிக்கப்பட்டிருந்தனர். அதனைத் தொடர்ந்து நடந்த வினா விடை நிகழ்ச்சி, சாதனாவில் அவர்களது சந்தேகங்களைத் தெளிவு படுத்தியது.
அப்யாசிகளுக்கு, மிஷனின் செயல்பாடுகளான இதயம் நிறைந்திருத்தல் ஆகியவை பற்றியும், அத்துடன், பல்வேறு இதழ்கள் மற்றும் மின்-புத்தகம் ஆகியவற்றைப் பதிவு செய்துகொள்வது பற்றியும் தெரிவிக்கப்பட்டது. பங்கேற்றவர்களின் ஈடுபாடு, நேர்மறையாகவும் ஊக்கமளிக்கும் வகையிலும் இருந்தது. மாலை சத்சங்கத்துடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.





**பிஷ்னுபூர், மேற்கு வங்காளம்**

பிஷ்னுபூர் மையம், கரக்பூர் புத்துணர்வு மையத்திலிருந்து சுமார் 70 கிமீ தொலைவில் உள்ளது. இந்த மையம் 30 அப்யாசிகளுடன் 2 1/2 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டது. அப்யாசிகள் அதிகமானவுடன், தியானத்திற்கென ஒரு இடம் தேவையாக இருந்தது. 800 சதுர அடியில், போதுமான வசதிகளுடன் கூடிய ஒரு அறை வாடகைக்கு எடுக்கப்பட்டது.

35 கொல்கத்தா அப்யாசிகள் உட்பட, சுமார் 75 அப்யாசிகள், ஜூலை 12ம் தேதி ஞாயிற்றுக்கிழமை, மண்டலப் பொறுப்பாளர் சகோ. அஜய்பட்டரால் நடத்தப்பட்ட திறப்பு விழா சத்சங்கத்தில் கலந்து கொண்டனர். 5 புதிய ஆர்வலர்களும் அறிமுகப்படுத்தப்பட்டனர். அப்யாசிகளிடம் மாஸ்டருக்கான அன்பு மற்றும் நன்றியுணர்வு நிரம்பி இருந்தது. கம்லேஷ்பாயின் உரை ஒளிபரப்பப்பட்டதைத் தொடர்ந்து, கரக்பூரிலிருந்து வந்த சகோ. பன்சி படன் பேரா மற்றும் சகோ. அஜய் பட்டர் ஆகியோர் உரையாற்றினர். அவர்கள் புதிய மையத்தை, பரிணாம வளர்ச்சிக்காகப் புத்திசாலித்தனமாக பயன்படுத்த வேண்டியதை பற்றி வலியுறுத்தினர்.

**ஜோத்பூர், இராஜஸ்தான்**

ஆகஸ்ட் 9 ம் தேதி குழந்தைகள் மற்றும் அப்யாசி சகோதரிகளால் தயாரிக்கப்பட்ட பல்வேறு பொருட்களைக் கொண்டு ஒரு கண்காட்சி நடத்தப்பட்டது. ராக்கி, கையால் தயாரிக்கப்பட்ட கடித உறைகள், உலர் பழங்கள் வைக்கும் மரப்பெட்டிகள், மரத்தால் செய்யப்பட்ட சாவிக்கொத்துகள் மற்றும் சில காகித ஆபரணங்கள் ஆகிய பொருட்கள் இருந்தன. குழந்தைகள் மையம் அப்யாசிகளிடமிருந்து பெரும் வரவேற்பைப் பெற்றது. அவர்கள், இது போன்ற நிகழ்வுகளை வரும் காலத்திலும் எதிர்பார்த்திருக்கின்றனர்.

**மண்டலக் கூட்டம், ஹரியானா**

ஹரியானாவின் அனைத்து மையங்களின் பிரசெப்டர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், உதவியாளர்கள், தன்னார்வத்தொண்டர்கள், மையப்பொறுப்பாளர்களுக்கும் ஜூலை 12ம் தேதி சோனாபெட் ஆசிரமத்தில் ஒரு மண்டல அளவிலான கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில், இதயம் நிறைந்திருத்தல் உட்பட்ட மிஷனின் தற்போதைய முயற்சிகள், மைய வாரியாக, அவற்றின் வளர்ச்சி பற்றிய மையப் பொறுப்பாளர்களின் சிறு விளக்கம் ஆகியவை இடம் பெற்றிருந்தன. இதயம் நிறைந்திருத்தல் நிகழ்ச்சிகளின் தேவை மற்றும் முக்கியத்துவத்தை அனைவரும் உட்கிரகித்துக்கொண்டனர்.

மேலும் புதிய நிகழ்ச்சிகளுக்கான ஒருங்கிணைப்பாளர்கள் நியமனம் ( மண்டல மற்றும் மைய அளவில்), தொலைதூர சிட்டிங்குகளின் தேவை, மற்றும் மையங்களின் பிரச்சனைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. மண்டலப் பொறுப்பாளர் சகோ. சத்தியா மண்டல், மைய வாரியாக இதயம் நிறைந்திருத்தல் நிகழ்ச்சியை நடைமுறைப்படுத்துவது பற்றி ஒரு கருத்துரை நடத்தினார்.

**பீவர், இராஜஸ்தான்**

ஜூன் 1 ம் தேதி, மண்டலம் 7 B யின் மண்டலப் பொறுப்பாளர் சகோ.மதுகர் இரண்டு சகோதரர்களுடன் தன்னார்வத்தொண்டர்கள் மற்றும் அப்யாசிகளுக்காக சுயமுன்னேற்றம் என்ற இதயம் தொடும் ஒரு நிகழ்ச்சியை நடத்தினார். தியானம், பத்து நியமங்கள், நன்னெறிக்கல்வி, யு-கனெக்ட், இதயம் நிறைந்திருத்தல் முயற்சிகள் மற்றும் குணநலன் உருவாக்கத்தின் பங்கு ஆகிய பல பொருட்கள் பற்றி இந்நிகழ்ச்சியில் கலந்துரையாடப்பட்டது.







## யு-கனெக்ட் நிகழ்ச்சிகள்

**சிவகாசி, தமிழ்நாடு**

ஜூலை-1 அன்று, யு-கனெக்ட் முயற்சியின் கீழ், சுய முன்னேற்ற நிகழ்ச்சி (Self Development Program (SDP) மெப்கோ ஷ்லெங்க் பொறியியல் கல்லூரியில் துவக்கப்பட்டது. சுமார் 250 பட்டப்படிப்பு மாணவர்கள் இதனால் பயன்பெறுவார்கள். பிரிசெப்டர் Dr T.செந்தில் இந்நிகழ்ச்சியை துவக்கிவைத்து விளக்க உரையாற்றினார். மூன்று மாதங்களில், 12 பாடங்கள் நடத்தப்படும். 'நன்நெறிகள், நன்னடத்தை, மனப்பான்மைகளைப் புரிந்துகொள்ளுதல்', 'நன்நெறிகள் மற்றும் உலக நெறிகளின் பயன்பாடு', 'கடவுள், சுயம்(Self) மற்றும் யோகத்தின் இறுதி இலட்சியம்', 'பல்வேறு யோகங்களின் அறிமுகம், நன்நெறிகளை யோகத்தில் இணைப்பது' ஆகிய தலைப்புகள் இதுவரை நடத்தப்பட்டுள்ளன. அனைத்துப் பகுதிகளிலும் கலந்துரையாடல்கள் இருந்தன. அவை தியானத்துடன் நிறைவடைந்தன. அனைத்து மாணவர்களும் கேள்வி கேட்டு தங்களுடைய சந்தேகங்களை தீர்த்துக்கொள்ள ஊக்குவிக்கப்பட்டனர்.

### தன்னார்வத் தொண்டர்கள் பயிற்சி முகாம், திரூர், கேரளா

19-21 ஜூலை மூன்று நாள், தன்னார்வத் தொண்டர்கள் பயிற்சி முகாம், திரூர் ஆசிரமத்தில் நடத்தப்பட்டது. மண்டலம் 3B மையங்களிலிருந்து சுமார் 75 அப்யாசிகள் கலந்துகொண்டனர்.

யு-கனெக்ட் பற்றிய அறிமுகம், இது குறித்து மாஸ்டரின் தொலைநோக்கு பார்வை, உள்ளடக்கம், வழிமுறை, யு-கனெக்ட் செயல்படுத்தும் முறை, பாடத்திட்டங்கள் ஆகிய பகுதிகள் இருந்தன. யு-கனெக்ட்டில் செயல்படுபவர்களும், அவர்களின் பங்கும் குறித்து விளக்கப்பட்டது. C-கனெக்ட், இதயம் நிறைந்திருத்தல் நிகழ்ச்சி, விழிப்புணர்வுடன் வாழ்தல் (Conscious Living), தியானம், சுய வளர்ச்சி ஆகியவை குறித்த கருத்துக்களையும் உதவியாளர்கள் பகிர்ந்துகொண்டனர். குழு கலந்துரையாடல்களுக்குப் பிறகு, ஒவ்வொரு மைய அளவிலும் நிறுவனங்களை அணுகுவதற்கு தன்னார்வத்தொண்டர் குழு அமைக்க முடிவெடுக்கப்பட்டது.

திரூரில் நடந்த நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக ஜூலை 5ல், பாலக்காடு மையத்தில் ஒரு நாள் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. சுமார் 75 அப்யாசிகள் இதில் கலந்துகொண்டனர். இந்நிகழ்ச்சியினால் 16 பேர் கொண்ட தன்னார்வத்தொண்டர் குழு உருவாக்கப்பட்டது. மாலை 3:30க்கு தியானத்துடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது.

### ஜபல்பூர் இளைஞர் கருத்தரங்கு, மத்திய பிரதேசம்

4, 5 ஜூலை, ஜபல்பூர் மண்டல ஆசிரமத்தில், 'வளரும் மிஷனில் இளைஞரின் பங்கு' என்ற தலைப்பில் இருநாள் இளைஞர் கருத்தரங்கு நடந்தது. மிஷனின் புதிய மேம்பாடுகள் குறித்து இளைஞர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கமாக இந்நிகழ்ச்சி இருந்தது. சுமார் 44 அப்யாசிகள் கலந்துரையாடும் பகுதியில் பங்கேற்றனர். இதில் ஒழுக்கம், கீழ்படிதல், தியானம் மற்றும் கால நிர்வாகம் குறித்த மாஸ்டரின் உரைகளும் இருந்தன.

இதயம் நிறைந்திருத்தல், யு-கனெக்ட், OSS, விஸ்பர்ஸ், நன்னெறிகளால் சுய முன்னேற்றம், பயிற்சி குறித்த கேள்வி-பதில் ஆகிய பகுதிகள் இருந்தன. இதயம் நிறைந்திருத்தல் பயிற்சி முகாமுடன் நிகழ்ச்சி முடிவடைந்தது. ஒவ்வொரு பகுதியின் முடிவிலும் உள்நோக்குவதற்கும், டைரி எழுதுவதற்கு நேரமும் கொடுக்கப்பட்டது. இளைஞர்கள், ஆசிரமத்தில் தன்னார்வத்தொண்டு செய்தனர். இந்நிகழ்ச்சியினால் ஊக்கமடைந்தனர்.





ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## யோகாஷ்ரம், பாலக்காடு, கேரளா

## ஒளி மையம்







1989, நவம்பர் மாதம், பாலக்காடு டவுன் ஹாலில் நடத்தப்பட்ட ஒரு வரவேற்புக்கூட்டம், மிஷனைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது. சிலர் மிஷனில் சேர்ந்தனர். 1989, டிசம்பர் மாதத்திற்குள், பிரிசெப்டர் சகோ. ரவீந்திரநாதனின் இல்லத்தில், வழக்கமான ஞாயிறு சத்சங்கங்கள் நடைபெற்றன. படிப்படியாக, மற்ற அப்யாசிகளின் இல்லங்களில் புதன்கிழமை சத்சங்கங்கள் நடத்தப்பட்டன. அக்கால கட்டத்தில், சுமார் 20 அப்யாசிகள் சத்சங்கத்தில் பங்கேற்று வந்தனர்.

வருடங்கள் செல்லச் செல்ல, ஒரு ஆசிரமம் வேண்டும் என்ற உந்துதல் ஏற்பட்டது. பாலக்காடு டவுனிலிருந்து 4 கி.மீ. தொலைவில், நெம்மாராவை நோக்கியுள்ள, யக்காரா என்னுமிடத்தில், ஆசிரமத்திற்கான நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1993 ல், மிஷனின் பெயரில் பதிவு செய்யப்பட்டது. மொத்தம் 73. 7 சென்ட் பரப்புள்ள இந்த ஆசிரமம், ஒரு தியானக் கூடம்( 2250 ச. அடி), சமையலறை, உணவுக்கூடம் மற்றும் கழிப்பறைத் தொகுதி ஆகியவற்றைக் கொண்டுள்ளது. 1995, செப்டம்பர் 10 ம் தேதி, சாரிஜி மகராஜ் அவர்களால், ஆசிரமத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. முதலில், சுமார் 700 ச. அடி அளவில் ஒரு கூடம் கட்டப்பட்டது. 2005 வரை, ஞாயிறு சத்சங்கங்கள் அங்கு நடைபெற்று வந்தன. முக்கிய தியானக்கூடத்திற்கான கட்டிடப் பணி, 2002ல் தொடங்கப்பட்டு, 2005ல் நிறைவுற்றது. புதிய தியானக்கூடம், 2005, மார்ச் 9 அன்று, சாரிஜி மகராஜ் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. தற்சமயம், பழைய தியானக்கூடமானது, சமையலறை மற்றும் உணவுக் கூடமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஆசிரமத்தைச் சுற்றியுள்ள இடம், அழகிய புல்வெளிகள் மற்றும் முன்புறத்தில் ஒரு சிறிய தாமரைக் குளம் ஆகியவற்றுடன் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. தெற்குப்புறத்தில், மாமரங்களும், தென்னை மரங்களும் உள்ளன. வளாகத்தில் உள்ள ஒரு திறந்த கிணற்றிலிருந்து நீர் பெறப்படுகிறது. யக்காரா நதிக்கரைகளில் ஆசிரமம் அமைந்திருப்பதால், அங்கு எப்பொழுதும் குளிர்ச்சியான, காற்றோட்டமான சூழல் நிலவுகிறது.

தற்சமயம், பாலக்காடு மையத்தில், 150 க்கும் அதிகமான அப்யாசிகள் உள்ளனர். ஞாயிறு காலைகளில், சராசரியாக, 70 பேர் பங்கேற்கின்றனர். தினமும் மாலையிலும் சத்சங்கம் நடைபெறுகிறது. பத்திரிபாலா, சேர்புலசேரி, நெம்மாரா, கொங்காட் மற்றும் காலேபுல்லி ஆகிய உப மையங்களும் நன்கு வளர்ச்சியடைந்து வருகின்றன. ஒவ்வொரு மாதமும், முதல் ஞாயிறு அன்று, முழு நாள் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. சகஜ மார்க்கம் தொடர்பான பல்வேறு தலைப்புகளில் குழுக்கலந்துரையாடல்களுடன், மிஷனின் வீடியோக்களும் திரையிடப்படுகின்றன. அப்யாசிகள் பயன்பெறும் வண்ணம், அப்யாசி பயிற்சி நிகழ்ச்சிகளும் அடிக்கடி நடத்தப்படுகின்றன. பல பகுதிகளிலும், அப்யாசிகளின் இல்லங்களில், இல்லக்கூட்டங்களும், வரவேற்புக்கூட்டங்களும் நடைபெற்று வருகின்றன. கேரளாவின், 3B மண்டலத்தின், கட்டுரை எழுதும் நிகழ்வின் சான்றிதழ் வழங்கும் விழா, இங்கு ஆண்டுதோறும் நடைபெறுகிறது. பல்வேறு செயல்பாடுகளை நடத்தி வரும் இம்மையம், மேலும் மேலும் அதிக அளவில் மக்களின் இதயங்களைச் சென்றடையும் வண்ணம், நம் மாஸ்டர்களின் நோக்கத்தைப் பரப்பத் தயாராகி வருகிறது.



To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org

© 2015 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. “Shri Ram Chandra Mission", "Sahaj Marg", “SRCM”, “Constant Remembrance” and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.